6. பிச்சொடை அய்யன் காப்பங்கு குடுத்து சன்னதி கட்டிவிச்ச உபயம்
7. ஆத்திரய கோத்திர

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 36/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1675
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1753
ஊர்	:	ஆறுதொழுவு	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	288/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	–			
இடம்	:	வரதராஜ பெருமாள் கோயில் தெற்குச் சுவர்.			
குறிப்புரை	:	வரதராசப் பெருமாள் கோயிலுக்குப் படி கட்டியச் செய்தி.			

கல்வெட்டு :

1. சொஸ்திஸ்ரீமன் சாலிவாகன

2. சூசுஸாஎயிரு கலியுகம் சசுஆாருயச ஸ்ரீமுக

3. வரு மாசி மீ யகூஉ கட்டையரசன் ம

4. கன் கட்டடம் சுப்பிறமணிய

5. கவுண்டன் மகன் ஆறுதொளு பச்செ

6. ாட் . . . . . வரதராசபெருமாள் சன்ன

7. தி திருபடி வச்ச உ

8. பயம் கந்தப்பக

9. வுண்டன் பெ . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 37/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	ஆறுதொழுவு	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	282/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	உம்மத்தூர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	வீரநஞ்சராய உடையார்			
இடம்	:	நாகீஸ்வரமுடையார் கோயில் தெற்குச் சுவர்.			
குறிப்புரை	:	ஆறத்தொழு நாகீஸ்வரமுடையார் கோயிலுக்கு ஐந்து மா நிலம் கொடை அளித்தச் செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ உன் மகாமண்டலீஸ்வரன் ஸ்ரீவீரநஞ்சராய உடையாற்கு செல்லாநின்ற சாதா
2. ரண வருஷம் காத்திகை மீ ஔச உ காங்கய நாட்டு ஆறத்தொழுவில் உடையார் திருநாக்கீசுரமுடைய
3. தம்பிரநாற்கு தென்கரை வீரசோழவளநாட்டு கற்றாயன் காணியில் அனைக்கீழ்ப்பற்றிலும் ஏரிக்கீழ்ப்பற்றி
4. லும் தாரைவாத்து குடுத்த நிலத்துக்கு விவரம் அனைகீழ் வாழை நோக்கியில் நின்மணியப்பர் தேவதா
5. னத்துக்கு கிழக்கு சொக்கப்பெருமா[ள்] திருவிடையாட்டத்துக்கு மேற்கு மிதுக்கு நடுமூன்றுமாநில
6. மும் மிதுவும் ஏரிகீழே நின்மணியப்பர் தேவதானத்துக்கு கிழக்கு மிரண்டு மாநிலமும் ஆகமிரண்
7. டு பற்றிலும் அஞ்சுமா நிலமும் அமுதுப்படிக்கு குடுத்தோம் மிது சந்திராதித்தவரைக்கு நடத்தி குடுக்க
8. கடவாராகவும் மிந்த தன்மத்தை மிறக்கினவர்கள் பிறுமகத்தி மகாதோசத்திலே போகக்கடவர்கள்
9. மிந்த தன்ம(த்தை) நடத்தினவர்கள் சிவபதம் பெறுவார்கள் பன்மாகேஸ்வர ரகைஷ உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 38/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	ஆலம்பாடி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	–			

இடம் : மாரியம்மன் கோயில் விளக்குத் தூண்

குறிப்புரை : குருசாமி செட்டியார் மகன் வெள்ளை செட்டியார் வாவி(குளம்) கட்டிய செய்தி

கல்வெட்டு :

1. குருசாமி செட்டியார் மகன்
2. வெள்ளை செட்டியார்
3. வாவி உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 39/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	பார்ப்பினி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	–			

இடம் : பச்சோட்டு ஆவுடையார் கோயில் தென்புறச் சுவர்.

குறிப்புரை : அகத்துறைப் பாட்டு

கல்வெட்டு :

சரங்கொண்டு இலங்கை சமைத்தபெற் றான்தனி
யார் இறைஞ்ச
உரங் கொண்ட காரைடன் உத்தமச் சோழன்
உபய புயம்
இரங்கும் படிஅரு ளான்மட வீரஇனி
என் உயிரை
குரங்கின் கையிற்பட்ட பூமாலை யாக்கும்
குளிர் தென்றலே

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 40/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	பார்ப்பினி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	வீரவல்லாளன்			

இடம் : நத்தகாட்டுச் சாம்பல்மேட்டில் உள்ள குத்துக் கல்.

குறிப்புரை : நீலகிரி சாதாரணன் கோட்டை மாதவப் பெருமாளுக்கு நிலம் கொடை அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஷ்வஷ்டிஸ்ரீ
2. நீலகிரி சா
3. தாரணன் கே
4. ாட்டையில்
5. நாயனார் ஸ்ரீ
6. மாதவப் பெ
7. பருமாளுக்
8. குக் காங்
9. கய நாட்டா
10. ர் திருவிடை
11. யாட்டமா
12. க விட்ட பா
13. ற்பனியான
14. கொங்கரம
15. ாதமாத
16. வ நல்லூர்
17. இதற்கும்
18. னான்
19. கெல்
20. லைக்
21. குட்ப
22. ட்ட
23. ார்க்
24. கும்
25. . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 41/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	பார்ப்பினி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	–			

இடம் : பெரிய நாயகியம்மன் கோயில் மடப்பள்ளி நிலை.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. விக்கிரம வருடம், தை மாதம் குறிக்கப்பெறுகின்றது.

கல்வெட்டு :

1. தோடர்

2. விக்

3. கிரம வ

4. ருஷம்

5. தை மா

6. சம் ந தேதி

7. உதைய

8. மேதிய

9. ர்ர்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 42/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1600
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1678
ஊர்	:	பார்ப்பினி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	–			

இடம் : பெரியநாயகியம்மன் கோயில் கொடிக்கம்பத்தில் போர்த்தபட்ட பித்தளைத் தகடு.

குறிப்புரை : பார்ப்பினி வீரசோழபுரம் கண்ணந்தை காடை குலத்துக் காணியாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. இவர்கள் இக்கொடிக் கம்பத்தினைச் செய்தளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்ரீகலியுகம் 4789 சகாப்தம்
2. 1600 குரோதன வருஷம் மாசி மாதம் 30 தேதி
3. காங்கேய நாட்டுப் பாற்பதியில்
4. பெரியநாயகியம்மனுக்குப் பாற்பதி
5. வீரசோளபுரம் காணியாளர்களில்
6. கண்ணந்தை காடை குல கோத்திரத்து
7. உபயம் பச்சையக் கவுண்டந் கருப்பண
8. கவுண்டந் செல்லப்பக் கவுண்டன் சதா
9. சேர்வை பெரிய நாயகியம்மன் துணை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 43/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	11
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1284
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	வட்டெழுத்து			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	:	மாந்தளீஸ்வரர் கோயிலுள்ள தனிக்கல்			
குறிப்புரை	:	வெள்ளாளன் கேசன்மூக்கன் பெயர் குறிக்கப்பெறுகின்றது.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி ஸ்ரீவிக்கிரம சோழ
2. தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற
3. திருநல்லியாண்டு பதினொன்றாவது
4. வள்ளிஎறிச்சல் வெள்ளாளன் கணக்கரில்
5. கேசன் மூக்கன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 44/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 942
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	வட்டெழுத்து			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	முதலாம் வீரசோழன்			
இடம்	:	மாந்தளீஸ்வரர் கோயில் நந்திமண்டபம்			

குறிப்புரை : வள்ளி எறிச்சல் ஊரைச் சேர்ந்த மங்கல்யன் மோடன் பொதுவனின் மனைவியர் ஒரு நந்தா விளக்கெரிக்கப் பொன் கொடையளித்ததைக் கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோநாட்டான் வீரசோழபன்ம
2. ர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற ஆண்டு
3. ஆறாவது இவ்வாண்டு வள்ளிஎறிச்சல்
4. மாந்தாளி ஈஸ்வரத்து மகாதேவர்
5. வள்ளிஎறிச்சல் மங்கல்யன் மோடன்
6. பொதுவனைச் சாத்தி பொதுவன்
7. பாவையும் பாவை படாரியும் ஒரு
8. நொந்தா விளக்கு எரிய வள்ளி எறிச்சில்
9. ஊரார் கைவழி வைத்த பொன்
10. காசேழகால் பொன் பன்னிரு
11. கழஞ்சு இது காத்தான் அடி என்
12. தலை மேலின

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 45/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	–			

இடம் : மாந்தளீஸ்வரமுடையார் கோயில் அர்த்தமண்டபம் தூண்.

குறிப்புரை : முத்தூர் என்னும் ஊரைச் சார்ந்த வெள்ளாளன் மணியர்களில் வன்றன் மாராயன் எனும் தென்னவன் மூவேந்த வேளான் என்பவன் தூண் ஒன்றினைத் தானமளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ முத்தூரிலிருக்கும் வெள்ளாளன்
2. மணியர்களில் வன்றன் மாராயனான
3. தென்னவன் மூவேந்த வேளான் இட்ட
4. கால்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 46/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	–			

இடம் : மாந்தளீஸ்வரமுடையார் கோயில் அர்த்தமண்டபம் தூண்.

குறிப்புரை : சிற்றிலோட்டில் வசிக்கும் வெள்ளாளன் காடகளில் ஆடன் புலியன் எனும் உத்தமசோழத் தமிழ் வேளான் என்பவன் வைத்த தூண் என்று கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சிற்றிலோட்டில்லிருக்கும்
2. வெள்ளாளன் காடகளில் ஆடன்
3. புலியனான உத்தமசோழத் தமிழ்
4. வேளாந் இட்ட கால்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 47/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 18–ஆம் நூற்.
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	–			

இடம் : மாந்தளீஸ்வரமுடையார் கோயில் அர்த்தமண்டபம் இடப்புறத் தூண்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு.

கல்வெட்டு :

1. ஸ்ரீவீரவிசைய பொக்கண உடையார்க்குச்
2. செல்லாநின்ற சுபகிருது வருஷத்து பங்குனி மாதம் 7ம் தேதி

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 48/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1222
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : மாந்தளீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபக் குமுதப்படை.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டு. தனபாலன் என்பவன் மாந்தளீஸ்வரம் கோயிலுக்கு கொடையளித்துள்ளான். ஆனால் கொடை விவரம் தெரியவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திரதேவற்கு யாண்டு
2. பதின் அஞ்சாவது . . . தன் தனபாலனேன்
3. ஆளுடையார் மாந்தாளி ஈஸ்வர முடையார்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 49/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	–			

இடம் : மாந்தளீஸ்வரர் கோயில் நந்தி மண்டபம்.

குறிப்புரை : துண்டு கல்வெட்டு. இக்கோயில் இறைவிக்கு (திருக்காமக் கோட்டட நாச்சியார்) அரிசிக் கொடை கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு :

1. . . . ரிசியும் திருக்காமக்கோட்ட
2. நாச்சியார்க்கு உரிய் நெல் அரிசி
3. ஆக நாழிஉரி அரிசியும் நெல்
4. அஞ்சிரெண்டினால்ப்படி அளிப்போமாகவும்
5. தங்களுக்கு படி.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 50/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	38
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 981
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	வட்டெழுத்து			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
அரசன்	:	முதலாம் வீரசோழன்			
இடம்	:	மாந்தளீஸ்வரர் கோயில் மேல் விதானம்.			
குறிப்புரை	:	துண்டு கல்வெட்டு. வள்ளியெறிச்சில் என்ற பெயர் கூறப்பெறுகின்றது.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோனாட்டான் வீரசோழப்
2. பெருமானடிகட்குத் திருவெழுத்திட்டுச்
3. செல்லாநின்ற யாண்டு முப்பத்தெட்டாவது
4. வள்ளிஎறிச்சில் ஊரை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 51/2010**

மாவட்டம் : திருப்பூர்

வட்டம் : காங்கேயம்

ஊர் : வள்ளியிறைச்சல்

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : கி.பி. 13–ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு
ஆண்டு அறிக்கை : –

மொழி : தமிழ்

முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : –

ஊர்க் கல்வெட்டு
எண் : 9

அரசன் : –

இடம் : மாந்தளீஸ்வரமுடையார் கோயில் அர்த்தமண்டபத் தூண்.

குறிப்புரை : சிற்றிலோட்டைச் சேர்ந்த வெள்ளாளன் காடகளில் ஆடன் புளியன் எனும் உத்தம சோழ மும்முடிச்சோழமாராயன் வைத்த தூண்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சிற்றிலோட்டிலிருக்கும்
2. வெள்ளாளன் காடகளில் ஆடன்
3. புலியனான உத்தமசோழ மும்முடிச்
4. சோழ மாராயன் இட்ட கால்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 52/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1277
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
அரசன்	:	வீரபாண்டியன்			
இடம்	:	சுப்ரமணியர் கோயில்			

குறிப்புரை : வள்ளியெறிச்சில் வெள்ளாளர்கள் மாந்தளீஸ்வரமுடையார் கோயில் இறைவனுக்கு அமுதுபடிக்காகக் நிலம் கொடுத்தச் செய்தி கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன்மண்டலீஸ்வரன் மகா
2. ராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
3. ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது
4. வள்ளியெறிச்சல் வெள்ளாளர்கள்
5. மாந்தீசுவரம் உடையார்க்கு அமுதுபடிக்கு
6. மூன்று மாத்திரை பூமி கொடுத்தோம் இது
7. பன்மாகேசுவரர் ரட்சை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 53/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 18–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	வள்ளியிறைச்சல்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
அரசன்	:	–			
இடம்	:	அழகுநாச்சி அம்மன் கோயில்.			
குறிப்புரை	:	கொடை விபரம் இல்லை.			

கல்வெட்டு :

1. சித்தார்த்தி வருஷம் அய்ப்பசி 21 தேதி
2. வில்லிகோத்திரம் நாட்டாக் கவுண்டர்
3. நல்லதம்பிக் கவுண்டர் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 54/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	சக. 1360
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1468
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	230/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	–			

இடம் : செயங்கொண்டநாத சுவாமி கோயில் நுழைவுவாயில் நிலை.

குறிப்புரை : திருவேங்கடமுடையான் என்பவன் இரண்டு ஒரு நிலை கால், இரண்டு படிகள் வைத்தது பற்றிக் கூறுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்தம் சூநூாகூ-ல் மேற்குக்காரையூரில் திருமாடலகோத்திரத்தில் பள்ளிகொண்ட பெருமாள

2. திருவேங்கடமுடையான் இட்ட திருநிலை காலிரண்டும் படியிரண்டும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 55/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	231/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	வீரமல்லிகார்ஜுனராயர்			
இடம்	:	செயங்கொண்டநாத சுவாமி கோயில் முன் உள்ள மண்டபத் தூண்.			
குறிப்புரை	:	வெள்ளாள மரபைச் சேர்ந்த பெற்றான் அல்லாள பெருமாள் என்பவன் தூண் வைத்த செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் ஸ்ரீவீரமல்லிகார்ஜுனராயர்க்குச் செல்லா நின்ற பிரபவ ஸம்வத்ஸரத்து வைகாசி மாதம் உஅஉ தேதி காங்கய நாட்டுக் காரையூரில் வெள்ளாளழன் மணியர்களில் பெற்றான் அல்லாளப் பெருமாள் இட்ட தூண்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 56/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	236/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	–			

இடம் : செயங்கொண்டநாத சுவாமி கோயில் முன் உள்ள மண்டபத் தூண்.

குறிப்புரை : குறுப்பு நாட்டுத் திங்களூர் அவினாசி பட்டன் மகன் நய்யாண்டி என்பவனின் மனைவி சித்திரத் தூண் போதிகை ஆகியவற்றை அளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. குறுப்பு நாட்டில் திங்களூரில் அவினாசிப்பட்டன் மகன் நய்யாண்டி கண தம்பிராட்டியார் உபையம் சித்திரத்தூணும் போதிகையும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 57/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	237/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	–			

இடம் : செயங்கொண்டநாத சுவாமி கோயில் முன் உள்ள மண்டப விதானம்.

குறிப்புரை : நற்காவிரி நாட்டுக் காரையூரில் வாழ்ந்த வாணிபன் நக்கன் மோடன் என்பவன் ஒரு பத்தியில் மூன்று உத்தரமும் நான்கு போதிகையும் அளித்த செய்தி. காரையூருக்கு புவனமாதேவிபுரம் என்ற பெயரும் இருந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ நற்காவிரி நாட்டுக் காரையூரான திரிபுவனமாதேவிபுரத்திலிருக்கும் வியாபாரி நக்கன்மோடன் இட்ட பத்தி ஒன்றால் உத்திரம் மூன்றும் போதிகை நாலும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 58/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	238/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	–			

இடம் : செயங்கொண்டநாத சுவாமி கோயில் முன் உள்ள மண்டப விதானம்.

குறிப்புரை : காரையூர் வாணிபன் நக்கன்மோடன் ஒருபத்தியில் மூன்று உத்திரங்களும் போதிகை நான்கும் செய்தளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ காரையூர் பயிரகுலத்து வியாபாரி நக்கன்மோடன் இட்டபத்தி ஒன்றால் உத்திரம் மூன்றும் போதிகை நாலும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 59/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	233/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	:	–			

இடம் : செயங்கொண்டநாத சுவாமி கோயில் முன் உள்ள மண்டபத் தூண்.

குறிப்புரை : காரையூர் வெள்ளாளரில் பயிரகுலத்து அழகன் உத்தமசோழக் காமிண்டன், கரியான் உத்தம சோழக் காமிண்டன் ஆகியோர் தூண் வைத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ காரையூர் வெள்ளாழன் பயிரகளில் அழகன் உத்தமசோழக் காமிண்டன் கரியான் உத்தமசோழக் காமிண்டன் இட்ட தூண்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 60/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	235/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	விசயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	வீரமல்லிகார்ஜுனராயர்			
இடம்	:	செயங்கொண்டநாத சுவாமி கோயில் முன் உள்ள மண்டபத் தூண்.			
குறிப்புரை	:	காரையூர் வெள்ளாளன் பயிரகுலத்து கொங்கவேளதரையன் இராக்ஷப்பெருமாள் என்பவன் தூண் வைத்த செய்தி			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலீஸ்வரன் ஸ்ரீவீரமல்லிகார்ஜுநராயர்க்குச் செல்லாநின்ற ப்ரபவ வருஷத்து வைகாசி மாதம் உஅந தேதி காங்கய நாட்டு காரை ஊரில் வெள்ளாழன் பயிறகளில் கொங்கவேளதரையன் இராக்ஷப்பெருமாள் இட்டதூண்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 61/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 15–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	234/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
அரசன்	:	–			

இடம் : செயங்கொண்டநாத சுவாமி கோயில் முன் உள்ள மண்டபத் தூண்.

குறிப்புரை : இவ்வூர் வீரநாயனார் கொங்குவேளதரையன் என்பவன் தூண் வைத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ காங்கைய நாட்டுக் காரையூரில் வீரநாயனார் கொங்கவேளதரையன் இட்ட தூண்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 62/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	கலி 4722, சக. 1543
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1621
ஊர்	:	நத்தக்காரையூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	239/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	நாயக்கர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
அரசன்	:	முத்துவீரப்ப நாயக்கர்			
இடம்	:	செயங்கொண்டநாதசுவாமி கேயரில் இரண்டாம் திருச்சுற்றில் உள்ள பலகைகல்.			
குறிப்புரை	:	காரையூர் பயிறகுலத்து நல்லதம்பி கவுண்டன் மகன் விசுவநாத சக்கரை உத்தம காமிண்டன் மன்றாடி காஞ்சிநதிக்கரையில் நவகிரகம்(?) பிரதிட்டை செய்த செய்தி			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலீஸ்வரன் அரியராயவிபாடன் பாசைக்குத் தப்புவராய கண்டன் ராமதேவமகாராயர் காரியத்துக்குக் கர்த்தரான முத்துவீரப்ப நாயக்கரையனவர்கள் தெட்சிண சமுத்திராதிபதியார்ப் பிறுதிவி ராச்சியம் பண்ணியருளாநின்ற கலியுகம் சகூளாஉஉ இதில் சாலிவாகன சகாப்தம் கூருூாசஉந க்கு மேல் செல்லாநின்ற துன்மதி வருஷம் பங்குனி மாதம் கூ தேதி ஆதித்தவார நாள் காங்கய நாட்டில் காரையூரில் வெள்ளாளப் பயிறர்களில் நல்லதம்பிக் கவுண்டர் விசுவநாத சக்கரை உத்தமகாமிண்டன் மன்றாடியாரவர்கள் தம்முட வெற்புவாசிச் சொத்திலே காஞ்சி நதி தீரத்தில் நவப்பிரதிட்டையாக

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 63/2010**

மாவட்டம் : திருப்பூர்

வட்டம் : காங்கேயம்

ஊர் : ஆனூர்

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : கி.பி. 19–ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு
ஆண்டு அறிக்கை : –

மொழி : தமிழ்

முன் பதிப்பு : –

எழுத்து : தமிழ்

அரசு : –

ஊர்க் கல்வெட்டு
எண் : 1

அரசன் : –

இடம் : ஆனூரம்மன் கோயில் முன்மண்டபக் கல்வெட்டு.

குறிப்புரை : பாடல் வடிவில் உள்ளது. திருப்பணி செய்த பணியாளர்களுக்கு உணவு, தாம்பூலம் அளித்த பயிற குலத்தாரைப் பற்றி புகழும் செய்தி

கல்வெட்டு :

உயருபுகழ் ஆனூர் வாழ் உத்தமிமண் டபம்கட்ட
உவந்து வந்து
பயிரகுலப் பெரியோர்கள் பணமெல்லாம் தான்கொடுத்தார்
பணியாளர்க்கு
வயிறுநிறை யச்சோறும் வாய்க்குவெற் றிலைப்பாக்கும்
தந்து
தயிரோடு வேளையிட்ட தர்மமிது அழகன்சர்க்
கரையதாமே

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 64/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1261
ஊர்	:	பரஞ்சேர்வழி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	559/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	இரண்டாம் விக்கிரமசோழன்			
இடம்	:	மத்யபுரீஸ்வரர் கோயில் கிணறு அருகே உள்ள கல்.			
குறிப்புரை	:	மிகச்சிறந்த கல்வெட்டு. கரைநாடு, அடிக்கீழ்தளம் பதினெண் பூமி மாகேஸ்வரர்களும் சேர்ந்து ஊர் மன்றுபிச்சை அளித்த செய்தி. திருவிழா, சமூகம் ஆகியவை பற்றி ஆய்வு செய்ய பல செய்திகளைக் கொண்டுள்ளது.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்ரம
2. சோழ தெவற்கு
3. யாண்டு நாலாவத
4. ற்கெதிராவது அஞ்சு
5. கரைநாடுமடிக்கீட்
6. தளமும் பதினெண்
7. பூமியில் மாஹேஸ்வரரு
8. ம் காங்கய நாட்டுப்
9. பரண்சேர் பள்ளியில்
10. நாயனார் நட்டூரம
11. ாந்தார்க்கிவ்வூரில் மன்
12. றுப்பிச்சை குடுத்தோமி
13. தக்கிவ்வூரிற் காவல்
14. ஊரர்ஆண்டொன்
15. ன்றுக்கு
16. ச் சந்தியா
17. தீபத்துக்
18. கு இரண்டு ப
19. ணமும் விசஷவ
20. யநஸம்வ்ருமங்
21. களுக்கு திருவமு
22. துபடிக்கு ஸம்வ்ர
23. மமொன்று
24. பணமொன்றாக

25. பணமைஞ்சு

26. ம் ஆண்டுவரை ெ

27. தாறுஞ் சூ்ராதித்த

28. வரை குடுப்பாராக

29. ராகவும் இ

30. த்தன்மமழிவு

31. செய்தவன் சிவ

32. ெ்ராஹியுமாய்

33. ஸ்ரீமாஹேஸ்வர

34. . . . த்தால்க்கொ

35. ன்றது குலையாவ

36. தாகவுங் குத்தி எ

37. . . . . .

38. வதாகவுமில்

39. படி சூலைஜூ செ

40. ய்து இத்தன்மம்

41. இவ்வூர்

42. வெள்

43. ளாளன் வெளய

44. ரகளத்த பிள்ளன்

45. அத்தாணியான

46. நாற்பத்தெண்ணா

47. யிர வேளாணும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 65/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	1
வட்டம்	:	காங்கேயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1257
ஊர்	:	பரஞ்சேர்வழி	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	560/1908
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	இரண்டாம் விக்கிரமசோழன்			
இடம்	:	மத்யபுரீஸ்வரர் கோயிலுள்ள தனிகல்.			
குறிப்புரை	:	பரஞ்சேர்பள்ளி இறைவனுக்கு பரஞ்சேர்பள்ளிபிடாகையைக் கொடையாக அளித்த செய்தி.			

கல்வெட்டு :

1. ஷ்வஷ்திஸ்ரீ கோ
2. ராஜவிக்கிரம சோ
3. முதேவற்கு செல்
4. லா- நின்ற யாண்
5. டு ஒன்றாவது காங்
6. கய னாட்டுப் பரஞ்சே
7. ர் பள்ளிஇல் மகா
8. தேவர் நட்டுரமாந்
9. தனாயனாற்கு பரஞ்சே
10. ர்பள்ளியிற் பிடா
11. கையான கொம்ப
12. பாடியும் உலவரை
13. யிற் குளமும் குடுத்தோ
14. ம் இவூர் நான்கெல்
15. லைக்குள்ப்பட்ட நஞ்
16. சை புஞ்சை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 66/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	–			

இடம் : பசுபதீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு குமுதம் பாகம். துண்டுகளாக உள்ளது.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுகள். இக்கோயிலுக்கு நிலம் நன்கொடை அளித்ததைப் பற்றி கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு :

பாகம் I

1. ஸ்வஸ்திஸ்ரீ கோஇராசகேசரி பன்மரான திரிபுவனச் சக் . . .
2. பசுபதீஸ்வர உடையார் . . .
3. மேல் . . . நிலம் அரைமாவும் . . . மய்கிவருக்கு மேற்குத் நாற் அரை மாவாய் . . . ஸ்ரீரகி . . . சுமாவு
4. கல்லாங் காட்டுக் கவருக்கு மேற்கு நிலமாவது மாற்கு அழுதுபடைக்க நிலம் காணியும், கொல்(லை) இரண்டு காணியும் ஆக . . . .

பாகம் II

1. கீழ்பள்ளத்தில் நிலம் காணியும் . . . .
2. நமக்கு விநாயகர் பிள்ளையார்
3. அடைக்காய் யமுதும் . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 67/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1199
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	165/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	இரண்டாம் குலோத்துங்கன்			
இடம்	:	பசுபதீஸ்வரர் கோயில் கருவறை வடபுறச் சுவர் குமுதம்			
குறிப்புரை	:	குலோத்துங்க சோழ அனுத்திர பல்லவராயன் என்பவன் பசுபதீசுவரர் கோயில் இறைவனுக்கு அமுதுபடிக்காக நிலம் கொடுத்தச் செய்தி.			

கல்வெட்டு :

1. ஷஷ்ரீஸ்ரீ[II] கோராஜகேசரி பரராந திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்[டு*] மூந்றாவது கொங்கூராந ஜயங்கொண்ட சோழ நல்லூர் மாதா . . .

2. ர் பசுவதீசுர உடையாற்கு [சுஜ]ந் நிலையுடைய பெருமாளாந குலோத்துங்க சோழ அணுத்திரப் பல்லவரையநேந் இப்படிக்கு விட்ட நிலம் இவ்வூற் கவர்[க] . . .

3. . . . மேல் கவரில் நிலம் அரைமாவு[ம்] கீழைதாம்பில் கவருக்கு மேற்கு நிலம் அரைமாவும் மேலைவாசலில் [படி செய்] தண்ணத்து மேற்கு . . . ளுக்கு தெற்கு நிலம் மு[க்] . . .

4. . . கல்லாங் காட்டுக் கவருக்கு மேற்கு நிலம் கணவரியாற்கு இறையூர் படிக்கு நிலம் காணியும் ஆக நிலம் இரண்டு மாவும் அமுதுபடியாக விட்டேந் இது பரராஜகேசரி

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 68/2010**

மாவட்டம் : திருப்பூர்

வட்டம் : தாராபுரம்

ஊர் : கொங்கூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : கொங்குச் சோழர்

அரசன் : வீரராசேந்திரன்

ஆட்சி ஆண்டு : 17

வரலாற்று ஆண்டு : கி.பி. 1224

இந்தியக் கல்வெட்டு
ஆண்டு அறிக்கை : 166/1920

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு
எண் : 3

இடம் : பசுபதீசுவரர் கோயில் கருவறை வடக்குக் குமுதம்

குறிப்புரை : விநாயகப்பிள்ளையார் முன் அமுதுபடிக்கு நிலம் விட்ட செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [II] தி்புவநசக்கரவத்திகள் ஸ்ரீவீர[ராஜே*]ந்தர தேவ[ற்]க்கு யாண்டு பதின்ஏழாவது வடபரிசா[ர] நாட்டு பெரும்பிழிநல் . . . . . [மண]வாட்டி பிள்ளை சந்திர . . . .

2. . . . ள வேரிக்கு கீழ் பள்ளத்தில் நிலம் காணியும் கீழை தூம்பிந் கீழ் நிலம் அரைக் காணியு . . . . நிலம் அரை மாவும் அதியசோழ மந் . . .

3. . . . புளியங் கழைக்கு வடக்கு விநாயகப்பிள்ளையாரு அமுதுபடிக்கு நிலம் காணியும் . . . யும் தெற்கு மேற்கு திருமெய்ப்பூசல் . . .

4. . . . யமுது அடைக்காயமுது மிளகமுது பலவெஞ்ச நாதிகளுக்கு விட்ட நிலம் முக . . . விட்டேந் இது பரஹெஶ்வர [ரகெஷ] [II]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 69/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	11
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1218
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	167/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பசுபதீசுவரர் கோயில் கருவறை வடசுவர் குமுதம்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ நல்லூரில் இருக்கும் பிள்ளனதேவன் என்பவன் சந்திவிளக்கு ஒன்று வைக்க காசு கொடுத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [II] வீரராஜேந்திர தேவற்கு யாண்டு ய்க ஆவது கொங்கூரான செயங்கொண்
2. டசோழநல்லூரில் இருக்கும் வெள்ளாழரில் சாத்தந்தைகளில் பிள்ளன் தேவ
3. நேன் நாயநார் பசுபதிசுரமுடையா[யா]ற்கு சந்திவிளக்கொன்றுக்கு குடுத்த
4. . . . . சோழபிடாரநேந்
5. இவ்விளக்கு குடங்கொண்டு கோயி
6. ல் புகுவார் சந்திராதித்தவற் பரூ
7. ஹெஸ்வர ரஷ்கை[II*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 70/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1214
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	168/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பசுபதிசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர் குமுதம்

குறிப்புரை : இவ்வூர் தேவரடியார் சாத்தி பெற்றி என்பவள் பசுபதீசுவரமுடையாற்கு சந்திவிளக்கு எரிக்க கழஞ்சு பொன் கொடுத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. . . . . ஶுவந சக்கரவத்திகள் ஸ்ரீவீரரா[ே]ஜஜ [ே*]உவற்கு யாண்டு ஏழாவது கொங்கூராந செயங்கொ .
2. [ட] சோழ நல்லூர் மஹா[ெ*]உவர் பசுபதீசுவரமுடையாற்கு சந்தியாதீபம் ஒந்றுக்கு துளைகழ
3. ஞ்சு பொந் குடுத்தேந் இவ்வூர் தேவரடியாரில் சாத்தி பெற்றியாந திருவிளக்கு பிச்[சியே]ந் இக[ா*] .
4. . . . டைய சிவஸ்ராஹ்மணர் வசம் குடுத்தேந் திருவிளக்கு பிச்சியேந் இப்பொந் கைக்கொண்டேந்
5. . . . பி கோத்திரத்து தேவந் ஆளவந்தியாந நாற்பத்தெண்ணாயிரப் பட்டநேந் ச[ஜ்ராதிதேவற்] குட . . .
6. . . . ாடு கோயில் புகுவார் செலுத்துவராக பஜாஹெஶ்வர ரஷிக்ஷ[ா*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 71/2010**

மாவட்டம் : திருப்பூர்

வட்டம் : தாராபுரம்

ஊர் : கொங்கூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : கொங்குச் சோழர்

அரசன் : வீரராசேந்திரன்

இடம் : பசுபதீசுவரர் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : வெள்ளாளன் ஒருவன் விளக்கு வைக்க காசு கொடுத்த செய்தி.

ஆட்சி ஆண்டு : –

வரலாற்று ஆண்டு : கி.பி. 13–ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு
ஆண்டு அறிக்கை : 169/1920

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு
எண் : 6

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] ஸ்ரீவீரராஜேந்ர தேவற்கு யாண்டு . . . . .
2. ழிய குலத்தில் பெரியாந் காவநாந வஞ்சிவேளா . . . . .
3. சிவஸ்ராஹ்மணர் வசம் குடுத்தேந் வஞ்சிவேளாநேந் இப்பொந் கைக்கொ . .
4. ண்டாநேந் இவ்விளக்கு சந்ராதித்தவற் குடங்கொடு கோயில் புகுவார் . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 72/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1214
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	170/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பசுபதீசுவரர் கோயில் மகாமண்டபம் வடசுவர் குமுதம்.

குறிப்புரை : இவ்வூர் வெள்ளாளன் ஒருவன் சந்திவிளக்கு வைக்க இக்கோயில் காணியுடைய சிவபிராமணன் பிள்ளையுரியவனிடம் கழஞ்சு பொன் கொடுத்த செய்தி.

கல்வெட்டு :

1. [ஸ்வ[ஸ்தி]ஸ்ரீ[**] ஸ்ரீவீரராஜேந்திர தேவற்கு . . . . ஏழாவது பொங்கலூர்கா
2. நாட்டு கொங்கூராந ஜயங்கொண்ட சோழநல்[லூரில் பசுப]திஸ்வரமுடையாற்கு ச[ந்தி]
3. யாதீபம் ஒன்றுக்கு துளை கழஞ்சு பொந் சிவஸ்வா[ஹ*]ண(வசம் குடுத்) தேந் இவூர் வெள்ளாழந் கொச்சகளில் சோழ[ன்] . .
4. கோவநேந் இப்பொந் கொண்டு விள[க்*]கு எரிக்கக் கடவந் இக்கோயில் காணி உடைய சிவஸ்வாஹ
5. ணந் கவுசிகந் ஆண்ட பிள்ளையுரியவனாந சைவாலைய சக்ஷவத்தியேந் குடங்கொடு கோயி . .
6. புகுவார் சந்ஷாதித்தவற் செலுத்துவராக [மா]ஹெஸ்வர ரக்ஷை உ[ll*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 73/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1159
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	171/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			
இடம்	:	பசுபதீசுவரர் கோயில் மகாமண்டபம் நுழைவாயில் இடது நிலைக்கால்			
குறிப்புரை	:	இருங்கோளன் குலோத்துங்க சோழ பல்லவரையன் அமுதுபடிக்காக அரிசி கொடை அளித்தச் செய்தி.			

கல்வெட்டு :

1. �ஸ்வஸ்திஸ்ரீ[॥*] கு
2. லோத்துங்க தே
3. சாழதேவர்க்கு
4. யாண்டு பத்[து]
5. ஆவது பொங்
6. கலூர்கா நாட்டு கெ
7. ாங்கூராந செ[யங்]
8. கொண்டசோழந
9. ல்லூர் ஆளுடை[யா]
10. ர் பசுபதி[ச்]சுவர
11. முடையாற்கு அமு
12. துபடி அரிசி க அ
13. ஞ்சு . . ாண்டு ஆ
14. க நெல் விடுவ
15. தாகவும் அரிசி
16. வரி அறகாத்
17. தி அளப்பார்கள்
18. ளாக கல்வெட்
19. டி குடுத்தோம்
20. முதலிகளி
21. ல் சுத்தன்அதி
22. ய சோழநா
23. ந வீ[ர]சோழ
24. இருங்கோளந்
25. . . . ஆளவந்
26. தாந் யாழ்வ
27. ல்லாநேன்னான குே
28. லாதுங்க சோழ . .
29. ப
30. . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 74/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	28
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1313
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	172/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
அரசன்	:	சுந்தரபாண்டியன்			
இடம்	:	பசுபதீசுவரர் கோயில் தெற்கு மண்டப உத்தரம்			
குறிப்புரை	:	அரசன் தேவதான இறையிலியாக மகாமண்டலவாணராய நல்லூர் என்னும் ஊர் ஒன்றினைக் கொடுத்தச் செய்தி. பசுபதீசுவரர் கோயில் இறைவன் வழிபாட்டிற்கு தேவையான அமுதபடி மற்றும் கோயில் திருப்பணிக் காக வேண்டி ஒரு கிராமத்தினை தேவதான இறையிலியாக அளித்துள்ளான்.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [II*] திரு வநஸ்கூ வதி கோநேரின்மை கொண்டான் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தேழாவதின் எதிராமாண்டை
2. ஆடிமாதம் ஏழாந்தியதி தென்பொங்கலூர்கா னாட்டுக் கொங்கூரான செயங் கொண்ட சோழநல்லூர் நாயனார் பசுபதீஸ்வரம் உடைய நாயனார் கோயில் தான
3. த்தார்க்கு இவ்வூர்க் கால்பாடாகக் குடி ஏற்றின மஹாமண்டலவாணராய நல்லூர் இருபத்தாறாவது முதல் தேவதான இறையிலியாகக் குடுத்தோம் இவ்வூற் கெ
4. ல்லையாவது கீழ்பாற் கெல்லைக்கு மேற்கும் தென்பாற்கெல்லைக்கு வடக்கும் மெல்[சீ]ரெல்லைக்கு கிழக்கும் வடசீரெல்லைக்குத் தெற்கும் இந்நான் கெல்லைக்குட்
5. பட்ட நத்தமும் குளமும் குளப்பரப்பும் கீழ் நோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும் தேன்படுகாடும் மீன்படு சுனையும் பொன்படுகுட்டமும் மற்றும் எப்பேற் பட்டனவும்

6. இவ்வூர்க்கு வருங் கடமை இறைவரி சிற்றாயம் எலவை யுகவை காணிக்கை மன்றுபாடு தெண்ட குற்றம் சுமை சுங்கம் உட்பட்ட இறைகளும் இந்த நாயனார்க்கு அமுதுபடி

7. உள்ளிட்ட . . . தாக்கும் திருப்பணிக்கும் இறையிலியாக குடுத்தோம் இப்படிக்கு இவ்வோலை[பிடி*]பாடாக கொண்டு வருவாதிகளுவரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும்

8. வெட்டிக் கொள்க இவை வில்லவ தரையன் எழுத்து இவை தொண்டைமான் எழுத்து உ இது ஸ்ரீஉஹெஸ்வர ரூஹெகூடி[।*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 75/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1214
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	173/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : பசுபதீசுவரர் கோயில் தெற்கு மண்டபத் தூண்

குறிப்புரை : கொங்கூரான செயங்கொண்ட சோழ நல்லூர் என்று ஊர்ப் பெயர் மட்டும் குறிக்கப்பெறுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [ll]
2. திரிபுவந சக்க
3. ரவத்திகள் ஸ்ரீ
4. வீ[ர]ராசேந்திர
5. தேவ[ற்]கு யா
6. ண்டு ஆறா
7. வதற்கெதி
8. ர் பொங்கலூ
9. ர்கா நாட்டு கெ
10. காங்கூரா
11. ந செயங்கெ
12. ாண்ட சோ
13. [ழ ந]ல்லூர்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 76/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1634
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1712
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	174/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
அரசன்	:	–			
இடம்	:	பசுபதீசுவரர் கோயிலில் உள்ள தனிக்கல்			
குறிப்புரை	:	திருமதில், கோபுர வாசல் செய்தது.			

கல்வெட்டு :

1. �ஸ்வஸ்திஸ்ரீ [॥*] ஸ
2. ஹாவதி சூசூா
3. ஈயச இதன்மேல்
4. சுபகிறிது
5. ஆவணி சுப
6. தினதில் திரும
7. தில் கோபுர
8. வாசல் இந்த
9. இரண்டும் உ
10. ண்டு பண்ணி
11. னது வரமிதீ
12. த்தி பெரவன்
13. கோன் செட்டி
14. யார் குலத்தில்
15. காசிப கோத்தி
16. ரத்தில் வடகுமி
17. யன் புத்திரன் ப
18. சுபதிலிங்கய
19. ன் தாயாரான
20. வேங்கிடம்
21. மனவாசிள் உ
22. ண்டு பண்ணி
23. ன உபயம்
24. பசுபதிசுர சு
25. வாமி ரட்சிக்
26. க வேணும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 77/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	13
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1220
ஊர்	:	கொங்கூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	175/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	12
அரசன்	:	வீரராசேந்திரன்			
இடம்	:	பிடாரி கோயில் மேற்குச் சுவர்			
குறிப்புரை	:	கொங்கூர் பிடாரிக்கு அமுதுபடிப்புறமாக முக்காணி நிலம் விட்டச் செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்திர தேவற்கு யாண்டு பதிந்மூன்றாவது பொங்கலூற்கா நாட்டு கீரநூர் முதலிகளில் யாழ்வல்லாந் அட்டாலைச் சேவகநாந . .

2. அணித்தப் [பல்]லவரையநேந் கொங்கூர் [பிடா]ரியாற்கு அமுதுபடிப்புறமாக எங்கள் ப[ா]ட்டநார் சோமநாததேவராந அணித்திரப் பல்லவரையர் இட்ட இவர் திருமு .

3. ன் . . . கொங்கூர் பிடாரியார் கோயிலுக்கு கிழக்கு நிலம் . . . பருத்தி கொல்லை நிலம் காணியும் ஆக நிலம் முக்காணியும் செம்பிலும் கல்லிலும் கல்வெட்டி கொள்வதாக இட்டந . . .

4. . . . . செல்வதாக பந்மாகேசுரஇரசைஷ [II*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 78/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1312
ஊர்	:	அலங்கியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	159/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	சுந்தரபாண்டியன்			
இடம்	:	கலியுகக் கன்னீசுவரர் கோயில் மகாமண்டப வடபுறச் சுவர்			
குறிப்புரை	:	திருமடைப்பள்ளியாரில் காண இனிய பெருமாளான விசையிங்கதேவர் மகள் அழகாண்டாள் என்பவள் தங்கள் பெற்றோர்கள் பெயரால் எழுந்தருளுவித்த காமகோட்ட நாச்சியார்க்கு அமுதுபடிக்காக 200 பணம் கொடுத்தச் செய்தி.			

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ [சுந்]தரபாண்டிய தேவற்கு யாண்டு உடை வது வைகாசி மாத ரு தியதி தெந்பொங்கலூற்கா நாட்டு அலங்கியமா
2. [ன உத்தம சே]ழ நல்லூர்க் காணி உடைய சிவப்பிரமணரோம் உடையார் கலியுக கன்நிசுரமுடையார் கோயில் காணியா
3. . . . . ா நாயினார் திருக்காமக் கோட்டத்து நாச்சியார் தேவர்கள் தம்பிராட்டியாரை எழுந்தருளிவித்து பாண்டி
4. . . . . மாடக் குளக்கீழ் மதுரையில் திருமடைப்பள்ளியாரில் காண இனிய பெருமாளாந விசையிங்க தேவர்
5. மகள் அழகாண்டார் தங்கள் மாதாக்கள் பேரால் எழுந்தருளுவித்த நாச்சியாற்கு அமுதுபடிக்கு இக்கோயில் காணி
6. உடைய சிவப்பிராமணரோம் கவிசிகன் கோத்திரத்தில் வீரசோழப்பட்டன் உள்ளிட்டாரும் உத்தமசோழச் சக்கரவத்

7. தி உள்ளிட்டாரும் சோழப் பெருமாள் உள்ளிட்டாரும் சைவாதராயன் உள்ளிட்டாரும் முத்திக்கு நாயகநம்பி உள்ளிட்டாரும் பிச்சந் ை

8. சவராதித்த பண்டிதந் உள்ளிட்டாரும் இவ்வணைவோமும் வாங்கிந பணம் ஊா இப்பணம் இருநூற்றுக்கும் நாள் ஒன்று

9. க்கு அமுதுபடிக்கு அரிசி முன்நாழியும் இவ்வரிசி முன்நாழியும் குடங்கொண்டு கோயில் புகுவாந் சஜ்ஜாதி

10. த்தவரை செலுத்துவோமாகவும் பந்மாஹெசுவர ரசைஷ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 79/2010**

மாவட்டம் : திருப்பூர்

வட்டம் : தாராபுரம்

ஊர் : அலங்கியம்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : கொங்குப் பாண்டியர்

அரசன் : சுந்தரபாண்டியன்

ஆட்சி ஆண்டு : 11

வரலாற்று ஆண்டு : கி.பி. 1296.

இந்தியக் கல்வெட்டு
ஆண்டு அறிக்கை : 160/1920

முன் பதிப்பு : –

ஊர்க் கல்வெட்டு
எண் : 2

இடம் : கலியுக கன்னீசுவரர் கோயில் மகாமண்டப வடபுறச் சுவர்

குறிப்புரை : வெள்ளாளன் சிவந்தகால் பெருமாள் தன்தேவர் ஞானமூர்த்தி தேவர் மடத்துக்கு மடப்புறமாக நிலம் விட்ட செய்தி. பெரும்பற்றுப்புலியூர் (சிதம்பரம்) மேலை மடத்திலுள்ள மெய்கண்டதேவர் சந்தானத்தில் ஆசாரியர்களாய் (குரு) உள்ளவர்கள் அனுபவிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ எம்மண்டலமுங் கொண்டருளிய வீர[சுன்தர]னுக்கு யாண்டு ய்க வது அற்பசி மாதம் தென் பொங்கலூற்கா நாட்டு அலங்
2. கியமான உத்தமசோழ நல்லூரில் வெள்ளாழரில் சிவந்தகால் பெருமாளேன் என்னுடைய தேவர் ஞானமூர்த்தி தேவர் நாயினார்க்கு மடப்புறமாக உதக
3. ம் பண்ணிக்குடுத்த பரிசாவது என்னுடைய மன்[றா]ட்டில் ஐயன் கவரில் தடிக ஒன்று நில . . . கு எல்லையாவது கீழ்ப்பாற் கெல்லையாவது கீழ்ப[ா]
4. கெல்லை காலிங்கராயர் மன்றாட்டுத் தடிக்கு மேற்கும் வடக்கெல்லை கூத்தப் பெருமாள் . . . க்குத் தெற்கும் மேல்பாற்கெல்லை காலிங்கராயர்
5. நிலத்துக்குக் கிழக்கும் தென்பாற்கெல்லை தேவராடியார் நிலத்துக்கு வடக்கும் இந்நான் கெல்லைக்குட்பட்ட தடி ஒன்று நிலங்காணிக்கு முதலியார் அள

6. ந்த நிலம் அரைக்காணி முந்திரிகைக் கீழரையே யரைக்காலு மன்றாட்டு வகையில் நடப்புக்கூலி மற்றும் எப்பேற்பட்ட சுதந்திரங்களும் ஊரவர் கழித்துக் குடுத்த
7. படிக்குக் கல்வெட்டிக் குடுத்தேன் சந்திராதி
8. த்தவரைக்கு என்னுடைய நாயினார் ஞான
9. மூர்த்திதேவர் நாயினார்க்கு அடியேன் சிவந்தகால்
10. பெருமாளேன் எழுத்துக் குற்ற முண்டாகிலும் குற்றமல்ல . . . . தாகவும்
11. மேலும் இம்மடப்புறம் பெரும்பற்றுப்புலியூர் மேலைமடத்தில் . . . [கண்டக]
12. மெய்கண்ட தேவர் சந்தானத்தில் ஆசாரிகளாயுள்ளார் அனுபவிப்பார்களாகவும் ஆ
13. சாரியர் எழுந்தருளிவாராதவணவுக்கு இச்சந்தானத்தில் தவசிகள் அ[னுபவி]ப்பாராகவும்[॥*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 80/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	2
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1258
ஊர்	:	அலங்கியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	161/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	:	கலியுகக் கன்னீசுவரர் கோயில் வடக்கு பிரகாரம் கல் [சுவர்]			
குறிப்புரை	:	அலங்கியம் எனும் உத்தமசோழ நல்லூர் முதலிகளில் தமையன் ஆளவந்தானான வீரராஜேந்திர அதியமான் என்பவனின் மனைக்கிழத்தி வடுகப் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து அமுதுபடிக்கு நிலம் கொடுத்த செய்தி.			

கல்வெட்டு :

1. திபுவநச[க்]கரவ
2. த்திகள் ஸ்ரீ விக்கிரமே
3. சாழதேவற்கு ய[ா]
4. ண்டு இரண்டாவது
5. அலங்கியமாந
6. உத்தமசோழந
7. ல்லூர் முதலிகளி
8. ல் தமையநாளவ
9. ஞாநாந வீரராஜே
10. ஜ அதியமான் ம[னை]

11. க்கிழத்தி சே[று]ம்

12. மைளந்ஆளுடை

13. யார் கலியுக

14. க கந்னீசுரசுரமுடை

15. யார் கோஇல் வடுக

16. பிள்ளையாராந ஆ[ளு]

17. டை[பிள்]ளையா[ரை எழுந்]

18. தருளிவித்து அழுது

19. படி நாள் க அரிசி மு

20. ந்நாழிக்கு விஞ்நசம்

21. ப்படி ஒந்று மூந்றாக

22. நெல் ஏறியது நாழியா

23. க விஷு அயந ஸங்கிராந்தி

24. நைமித்திகப்படிக்கு [ப]

25. டி இரட்டியும் அக்கா[ல]

26. [த்]தில் பூஜைக்கும் விட்ட

27. [ந்]நிலம் எந்நூரான . . . ல .

28. க்காணி தொங்கிட்டிலில்

29. [புளி] ஒரு செய் கலத்து

30. க்கு எல்லையாவது இட

31. ங்கவருக்கு கிழக்கு வலங்

32. கவருக்கு வடக்கு தொ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 81/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	10+1
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1218
ஊர்	:	அலங்கியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	162/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
அரசன்	:	வீரராசேந்திரன்			
இடம்	:	கலியுகக் கன்னீசுவரர் கோயில் தெற்கு பிரகார சுவர்			
குறிப்புரை	:	இவ்வூர் ஊராளிகளில் வீரநாந வீரராசேந்திர அதியமான் அவினாசி கோயில் திருக்காமகோட்ட நாச்சியார்க்கு இவ்வூரில் நிலம் கொடுத்தச் செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு ௩ எதிர் பொங்கலூர்கா நாட்டு [அலங்கியமான] உத்தம சோழ நல்[லூர்] . . . .
2. ளில் சிறுப்பிள்ளை வீரநாந வீரராஜேந்ர அதியமாநேந் ஆளுடையார் அவிநாசி ஆண்டார் திருக்காம கே[ா] . . . ச்செரு . . .
3. ந் தூராண்மைக் காணி உடையார் கவரில் கவருக்கு மேற்கு காங்க நாச்சந்சேரு வடக்கு வடகடை பல்லவரைய . . . பட . . .
4. மேலை உவத்திர[த்]து ஸ்ரீக அலாலைமுடையார் நில[த்]து[க்]கு கிழக்கு ஆற்றுக்குத் தெற்கு சிவகொங்க நிலத்துக்கு [மேற்]கு . . . ணி . . .
5. முன் பேச நாங் கொண்டு நாளொந்றுக்கு விஞ்சநமுட்பட இருநாழி அரிசி அமுதுபடி செல்வதாகவும் இந்நிலத்துக்கு இறை[யும்] . . . . . மற்றும் .
6. ந்நிலம் செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வதாக இது சந்திராதித்தவரை செ[ல்]வதாக இது பஹாஹெஸ்வர ரகிகூ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 82/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1223
ஊர்	:	அலங்கியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	163/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
அரசன்	:	வீரராசேந்திரன்			

இடம் : கலியுக் கன்னீசுவரர் கோயில் திருச்சுற்று தெற்குச் சுவர்

குறிப்புரை : வீரராசேந்திர அதியமான் என்பானின் அண்ணன் விருதராயர் என்பவன் திருப்புதியதுக்கு (இறைவனுக்கு முதல் விளைவைக் கொண்டு படையல் செய்யும் ஓர் உணவு அதாவது இதில் குறிப்பிட்டுள்ள திருப்பண்ணியாரம் எனலாம்.) ஒதுக்கிய நிலம் போதமையால் இவனும் ஒரு குறிப்பிட்ட நிலத்தை திருப்புதியதுக்குத் தானமாக வழங்கியுள்ளான்.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ] வீரராஜேந்திர தேவற்கு யாண்டு ஐரு வதின் எதிர் வீரராசேந்திர அதியமாநேன் எங்கள் தமையநா[ர்] விருதராயர் திருப்புதியதுக்கு விட்ட நிலம் கதிரதொழுவும் திருப்பண்ணியாரத்துக்கு விஞ்சநங்

2. . . . போதாமையில் எந் ஊராண்மை காணி தோட்டகவரில் மணற்கவருக்கு மேற்கு இடங்கைநாயகர் திருப்பள்ளியறை நாச்சியார் தேவதாநத்துக்கு வடக்கு கவருக்கு கிழக்கு பெருங்கருணைச் செல்வியார்

3. . . . [ள]த்துக்கு தெற்கு இந்நாந்கெல்லைக்கு உட்பட்ட நிலம் திருப்புதியிது தந்மத்துக்கு விட்டேந் சந்திராதித்தவரை செல்வதாக இது பந்மாவெஹஸ்வரரகைஷ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 83/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	கலி 5010
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1909
ஊர்	:	அலங்கியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	–
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
அரசன்	:	–			

இடம் : பேருந்து நிறுத்தம் விநாயகர் கோயில் கல்வெட்டு

குறிப்புரை : இவ்வூரிலுள்ள இந்துமக்கள் ஒன்று கூடி இந்த விநாயகர் கோயிலைக் கட்டியுள்ளனர் என்பதை கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு :

முதல் பக்கம்

1. கலியு
2. காதி
3. ருதூய
4. வூ கார்
5. திகை மீ
6. ய உ தீ
7. சக்கிர
8. வாகை
9. சிளா

இரண்டாம் பக்கம்

1. விசேத
2. செய்தி
3. ஞாபககர்த்தி
4. ற்க்கு இந்த
5. வூர் இந்துக்கள்
6. செய்து வை
7. த்த பிரஸ்
8. ணம் சத்தி
9. ராத்து
10. விநாயகர்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 84/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13–ஆம் நூற்றாண்டு
ஊர்	:	அலங்கியம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	164/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
அரசன்	:	–			

இடம் : கலியுகக்கன்னீசுவரர் கோயில் விநாயகர் சன்னதி சுவர்.

குறிப்புரை : விபரம் அறிய முடியவில்லை. பிரமதேயம், நிலக்கொடை.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்தி]ஸ்ரீ த்ரை வனச்சக்கரவத்தி கோனேரின்மை கொண்
2. . . . அத்தியூராழ்வான் . . .
3. . . . யனூ[ர்] நாட்டு அலங்கியமான உத்தமசோழன் நல்
4. . . . [உட்]பற்றில் புன்கங்கவரில் குற்றக்காணியான வை
5. . . . பற்றுக்கு மேற்கும் பாச்சற்கவருக்கு வடக்கும்
6. . . . ற்றுக்கு கிழக்கும் புன்கங்கவருக்கு [உள்] கவருக்கு தெற்
7. . . . நாற்பாற்கெல்லைக்குட்பட்ட தடி மூன்றினால் விதை நி
8. . . . த்துக்கு இருபத்தாறாவது முதல் ஓட்டச்சுக் கடமை
9. . . . காணிக்[கை] எலவை மண்டல முதல்மைப்பேறு ம . . .
10. . . . வினியோகம் நி . . . ப்பாயம் அணி[யி] வாணிவரி காலிங்
11. . . . னவில் கூலி காத்திகைபச்சை கூற்றிலக்கை கடைக்கூட்டு இல்
12. . . . . நம் தவிர்த்து தன்மதான இறையிலியாகத் தந்தோம் இப்படிக்கு
13. . . . சஞ்ராதித்தவரைச் செல்வதாகக் கல்லிலு[ஞ்] செம்பிலும் வெட் . .
14. . . . யதரையன் எழுத்து இவை வாணாயிரஞாஜன் எழுத்து இயாண்டு உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 85/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	30
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1303
ஊர்	:	கோனாபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	141/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	:	விண்ணகரம் பெருமாள் கோயில் மடப்பள்ளி உத்தரம்			
குறிப்புரை	:	சிவபாதசேகரன் எனபவன் உத்திரம் வைத்த செய்தி.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு நய வது சிவபாத
2. சேகர மூவேந்தவேளான் இட்ட உத்தரம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 86/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1299
ஊர்	:	கோனாபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	142/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
அரசன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			
இடம்	:	விண்ணகரம் பெருமாள் கோயில் மண்டபத்தூண்			
குறிப்புரை	:	கடற்றூர் வியாபாரி ஒருவன் மருதுடையார் கோயிலில் தூண் வைத்த செய்தி கூறப்பெறுகின்றது.			

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு ய
2. ாண்டு உயசு வது எடற்றூரில் இருக்கும் வியாபா
3. ரி அவிநாசியரைசன் னாமியில்லாவுடை
4. யார் திருமருதுடையார்க்கு இட்ட தூண் ஒன்று

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் :- 87/2010**

மாவட்டம்	:	திருப்பூர்	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	:	தாராபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1311
ஊர்	:	கோனாபுரம்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	:	139/1920
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	கொங்குப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
அரசன்	:	சுந்தரபாண்டியன்			
இடம்	:	விண்ணகரம் பெருமாள் கோயில் தெற்குச் சுவர்			

குறிப்புரை : காலிங்கராயன் இவ்வூரில் பலரிடம் வாங்கிய நிலத்தை (பத்து கல விதைப்பாடு) திருவிடையாட்டமாகக் கொடுத்த செய்தி. சமூக அமைப்பு, இடைக்காலத்தில் வரிவிதிப்புமுறை ஆகியவை பற்றி ஆய்வு செய்ய சிறந்த ஆவணம்.

கல்வெட்டு :

